## 1. கடல் மீனவ மகளிருக்கு உயிரி தொழில்நுட்ப (பயோமெட்ரிக்) அடையாள அட்டை வழங்குதல்

கடல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதைப் போன்று மீன்பிடி தொழிலை சார்ந்தே தங்களது வாழ்வாதாரத் தொழிலை மேற்கொள்ளும் சுமார் **1.90 இலட்சம்** மீனவ மகளிரை அடையாளம் காணவும், அவர்களின் பிறந்த நாள், குடியிருப்பு நிலை அறியவும், அவர்கள் தொழில் புரியும்போது பாதுகாப்பு வழங்கிடவும் ஏதுவாக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2014–15**ஆம் ஆண்டில் உயிரி தொழில்நுட்ப அடையாள அட்டை (Biometric ID Cards) 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**2. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள எண்ணூர், கடலூர் மாவட்டத்திலுள்ள கடலூர் முதுநகர், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வெள்ளப்பள்ளம் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் அமைப்பது தொடர்பான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.**

திருவள்ளூர் மாவட்டம் எண்ணூரில் சூரை மீன் கையாளுவதற்குரிய வசதிகளுடன் கூடிய மீன்பிடி துறைமுகம் அமைக்கவும், நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கவும், கடலூர் மாவட்டம் கடலூர் முதுநகரில் உள்ள பழைய மீன்பிடித் துறைமுகத்தை புனரமைக்கவும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் மாதிரி வடிவமைப்பு ஆய்வுகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

**3. வண்ணமீன் வளர்ப்பில் ஊரக மகளிருக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிட தமிழகத்தின் 10 மாவட்டங்களில் வண்ணமீன் வளர்ப்பு மற்றும் விற்பனை மையம் உருவாக்குதல்.**

ஊரக பகுதியில் வாழும் மகளிர், வண்ணமீன் வளர்ப்புத் தொழிலை மேற்கொண்டு அதிக வருவாய் ஈட்டி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திடும் வகையில், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருச்சி, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய பத்து மாவட்டங்களில் சோதனையடிப்படையில் வண்ணமீன் வளர்ப்பு அலகு ஒன்றிற்கு 50 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக 50,000/– ரூபாய் வரை வழங்கப்படும். இத்திட்டம், 2014–15ஆம் ஆண்டில் 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** செயல்படுத்தப்படும்.

**4. தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் மூலம் தீவிர மீன்வளர்ப்பு, மீன் நோய்கள் மற்றும் மண் மற்றும் நீர் தர ஆய்வகங்கள் அமைத்தல், மீன் வளர்ப்பு தொழில்நுட்பத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.**

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு, நடப்பாண்டில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** தமிழ்நாடு மீன்வளப் பல்கலைகழகம் மூலம் தீவிர மீன்வளர்ப்பு, மீன் நோய்கள் மற்றும் மண் மற்றும் நீர் தர ஆய்வகங்கள் அமைத்தல், மீன் வளர்ப்பு தொழில்நுட்பத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் 1.90 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**5. விவசாயிகள் கூடுதல் வருவாய் ஈட்டிடும் வகையில் பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ள 50 விழுக்காடு இடுபொருள் மானியம் வழங்குதல்.**

விவசாயிகளிடையே பேராதரவு பெற்றுள்ள பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ள 50 விழுக்காடு இடுபொருள் மானியம் வழங்கும் திட்டம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில்** நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**6. மீன் உற்பத்தி திறனை அதிகரிக்க ஊரக குளங்களில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்க்கும் முறையினை செயல் விளக்கம் அளித்தல்.**

**2014–15**ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், திருவாரூர், ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பொருத்தமான நீர்நிலைகள் தேர்வு செய்யப்பட்டு, மொத்தம் இருபது மிதவை கூண்டுகள் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் 1 கோடியே 33 இலட்சம் ரூபாய்** செலவில் அமைத்து உள்நாட்டு மீனவர்கள் பயன்பெறும் வகையில் மீன் வளர்ப்பு செயல்முறை விளக்கம் மேற்கொள்ளப்படும்.

**7. உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு 50 விழுக்காடு மானியத்தில் மீன்பிடி வலைகள் வழங்குதல்.**

உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை அதிகரித்திடும் பொருட்டு உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த 1,000 உறுப்பினர்களுக்கு தலா இருபது கிலோ அளவிலான நைலான் மீன்பிடி வலை வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமும், 50 பயனாளிகளுக்கு இழு வலைகள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 78 இலட்சம் ரூபாய் செலவில்** நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

**8. குறுகிய கால நீர்நிலைகளில் வளர்ப்பதற்குகந்த மீனினங்களை அறிமுகப்படுத்துவதற்காக மீன்வளர்ப்பதற்கான இடுபொருள் செலவினத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்குதல்.**

குறுகிய காலத்தில் வேகமாக வளர்ந்து அறுவடைக்குத் தயாராகும் மரபணு மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா மீன்வளர்ப்பினை அறிமுகப்படுத்துமுகமாக, பண்ணைக் குட்டைகளில் இந்த வகை மீன்வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு இடுபொருள் செலவினத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 2014–15ஆம் ஆண்டில் **72 இலட்சம் ரூபாயில்** செயல்படுத்தப்படும்.

**9. மீன்வளத்துறை அலுவலர்களுக்கு வெளிநாடுகளில் நவீன மீன்வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்த பயிற்சியளித்தல்.**

வெளிநாடுகளில் தற்சமயம் மீன்வளர்ப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களை தமிழ்நாடு மீன்வளத்துறையைச் சார்ந்த தொழில் நுட்ப அலுவலர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அந்நாடுகளுக்கு சென்று தேவையான பயிற்சிகள் பெற **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் 2014–15**ஆம் ஆண்டில் **70 இலட்சம் ரூபாய்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**10. பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்.**

உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரமாக விளங்கும் உள்நாட்டு நீர்நிலைகளில் பிடிக்கப்படும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் அதன் மூலம் அவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு உரிய விலையினைப் பெற்றிடவும், ஈரோடு மாவட்டத்திலுள்ள பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் நடப்பாண்டில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மீன் இறங்குதளம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 60 இலட்சம் ரூபாய்** செலவில் அமைக்கப்படும்.

**11. சென்னை, மதுரை மற்றும் பிற நகரங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல்.**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நவீன மீன் விற்பனை அங்காடிகளை பல இடங்களில் நிறுவி மக்களுக்கு தரமான மீன்களை நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. இச்சேவையினை மேலும் விரிவாக்கிட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி**, சென்னை, மதுரை மற்றும் பிற நகரங்களில் 2014–15 ஆம் ஆண்டில், 80 இலட்சம் ரூபாய் செலவில் எட்டு நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும்.

**12. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் சென்னையில் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல்.**

தரமான மீன்களை சுகாதாரமான முறையில், நியாயமான விலையில் பொது மக்களின் வசிப்பிடத்திற்கே சென்று மீன் விற்பனையை செய்ய ஏதுவாக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி**, சென்னையில் மேலும் 5 நடமாடும் மீன்விற்பனை நிலையங்கள் **50 இலட்சம் ரூபாய்** செலவில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் நடப்பாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.

**13. சென்னை சாந்தோமில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு கூடுதல் நிர்வாக அலுவலக கட்டிடம் கட்டுதல்.**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தற்போது குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இப்பணிகளை மேலும் விரிவுபடுத்தி தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தை சிறந்த முறையில் நிர்வகித்திட, சென்னை சாந்தோமில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு கூடுதல் நிர்வாக அலுவலக கட்டிடம் **2 கோடியே 50 இலட்சம் ரூபாய்** செலவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி**, 2014–15–ஆம் ஆண்டில் கட்டப்படும்.

**14. இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் கடல் பகுதியில் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் மூலம் கடல் மீன்குஞ்சு பொறிப்பகம் அமைத்தல்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2014–15**ஆம் ஆண்டில் **1 கோடியே 84 இலட்சம் ரூபாய்** செலவில் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் ஒரு புதிய கடல் மீன்குஞ்சு பொறிப்பகம் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் மூலம் நிறுவப்படும். இதில் இராமநாதபுரம் மாவட்ட மீனவர்களின் மாற்று வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் பயிற்சிகள் மற்றும் செயல்நுட்ப திறனும் அளிக்கப்படும்.

**15. கன்னியாகுமரி மாவட்டத்தில் நோய்தாக்காத நாட்டு இன தாய் இறால் வங்கி நிறுவுதல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் நோய் தாக்காத தரமான நாட்டு இன இறால் குஞ்சுகளை தொடர்ச்சியாக உற்பத்தி செய்திட தேவைப்படும் நோய் தாக்காத நாட்டு இன தாய் இறால் வங்கி, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** 1 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மூலம் 2014–15ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

**16. கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூரில் மண்டல மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நிலையம் அமைத்தல்.**

குறுகிய காலத்தில் வேகமாக வளரக்கூடிய மீனின வகைகளுக்கான மீன் குஞ்சு பொறிப்பகம் அமைத்து, அதன் தொழில்நுட்ப பயிற்சியினை மீன்வளர்போர்க்கு வழங்க **2014–15–**ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூரில் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தின்கீழ் மண்டல மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் **1** கோடியே **21** இலட்சம் ரூபாய் செலவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** அமைக்கப்படும்.

**17. மீன்வளத்துறை அலுவலகங்களுக்கு புதிய அலுவலக கட்டடங்கள் கட்டுதல்**

சென்னை இராயபுரத்தில் இயங்கி வரும் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் இயங்கி வரும் சார் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் தூத்துக்குடி மீன்பிடி துறைமுக வளாகத்தில் இயங்கி வரும் மீன்பிடி துறைமுக உதவி செயற்பொறியாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு **2014–15** ஆம் ஆண்டில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி , 67** இலட்சம் ரூபாய் செலவில் புதிய அலுவலக கட்டடங்கள் கட்டப்படும்**.**